வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 12.01.2026 திங்கட்கிழமை இதழ் : 12 பக்கங்கள் : 08





## வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்பு பணி ஆரம்பம்

கொழும்பு, ஜன. 12

டித்வா சூறாவளியால் பெருமளவில் சேதமடைந்த வடக்கு மற்றும் தலைமன்னார் புகையிரத பாதைகளை புனரமைக்கும் பணி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மஹோ புகையிரத நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமான இந்த நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ்ஜா உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். 07



# இலங்கை தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க உடனடி நடவடிக்கை தேவை

## இந்திய பிரதமர் மோடிக்கு தமிழ்நாடு முதல்வர் கடிதம்

சென்னை, ஜனவரி 12

இலங்கையில் கொண்டுவரப்படும் அரசமைப்பு சீர்த்திருத்தங்களால், இலங்கை தமிழ் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாத்திட உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்றைய தினம் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

“ஆழமான வரலாற்று, கலாசார மற்றும் உணர்வுபூர்வமான பிணைப்புகளால் இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைகளையும் - எண்ணங்களையும் நிலைநிறுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. தமிழ்நாட்டின் முதல்வர் என்ற முறையில், இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள மரியாதைக்குரிய தமிழ்த் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் இலங்கையில் முன்மொழியப்பட்ட புதிய அரசமைப்பு தொடர்பான பிரச்னை 07



## உயர்தர பரீட்சை இன்று மீள ஆரம்பம்

கொழும்பு, ஜன. 12

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரிடர்களை தொடர்ந்து இடைநிறுத்தப்பட்ட உயர்தர பரீட்சை இன்று மீள ஆரம்பமாகிறது.

இன்று ஆரம்பமாகும் உயர்தர பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி வரை 07

# சீன வெளிவிவகார அமைச்சர் நாளை இலங்கை வருகின்றார்

### விசேட நிதியுதவியை அறிவிக்கவும் வாய்ப்பு

கொழும்பு, ஜன. 12

சீன வெளிவிவகார அமைச்சர் வோங் யீ இரு நாட்கள் பயணமாக நாளை செவ்வாய்க்கிழமை இலங்கை வருகிறார்.

கடந்த 36 ஆண்டுகளாக சீன வெளிவிவகார அமைச்சர்கள் ஆண்டின் முதல் பயணத்தை ஆபிரிக்க நாடுகளுக்கு மேற்கொள்கின்றனர். இதன்படி, எத்தியோப்பியா, சோமாலியா, 07



## இரு நாட்கள் பயணமாக யாழ். வருகிறார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், ஜன. 12

தைப்பொங்கலையொட்டி இரு நாட்கள் பயணமாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க யாழ்ப்பாணம் வருகிறார்.

தைப்பொங்கல் தினமான எதிர்வரும் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி வேலணை தெற்கு சிறீ சுப்பிரமணிய சுவாமி கோயில் முன்றலில் நடைபெறும் பொங்கல் விழாவில் பங்கேற்பார்.

பின்னர், அன்று மாலை 4 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றலில் 07

### மாகாண சபை தேர்தலை வலியுறுத்துவது குறித்து பேச

# தமிழ் அரசு, ஜ. த. தே. கூட்டணி யாழ்ப்பாணத்தில் கூடுகின்றன

யாழ்ப்பாணம், ஜன. 12

மாகாண சபைகள் தேர்தல் எந்த முறைமையின் கீழ் நடத்தப்பட வேண்டும் என்பதை ஆராய்வதற்காக 12 பேரடங்கிய விசேட தெரிவுக் குழுவை நியமிப்பதற்கான யோசனை அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டிருக்கும் நிலையில், தேர்தலை இழுத்தடிப்பதற்கான இந்த முயற்சியை உரியவாறு கையாண்டு, இந்த வருடத்துக்குள் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களை எவ்வாறு பிரயோகிப்பது என்பது குறித்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் 07

## ரயில் மோதிய இளைஞர் பலி

த. பிரதீபன்

யாழ்ப்பாணம், ஜன. 12

ரயில் மோதியதில் படுகாயமடைந்த இளைஞர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞர் நேற்று முன்தினம் அரியாலை 13ஆம் கட்டை பகுதியில் பாதுகாப்பற்ற 07

## கங்காராமை விகாரைக்கு வழிபடச் சென்ற டக்ளஸ்!

கொழும்பு, ஜன. 12

அண்மையில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட ஈ. பி. டி. பியின் பொதுச் செயலாளர் கே. என். டக்ளஸ் தேவானந்தா நேற்றைய தினம் கொழும்பு கங்காராமை விகாரையில் வழிபாட்டில் ஈடுபட்டார்.

இதன்போது, அவர் கொழும்பு கங்காராமை விகாராதிபதி கிரிந்தே அஸ்ஸஜி நாயக்க தேரரிடம் ஆசியையும் பெற்றுக் கொண்டார்.

இதன்போது, “பல்வேறு சவால்களையும் கடந்து வந்த நீங்கள் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும். இந்த நாட்டிலே நியாயமான முறையில் சிந்திக்கின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் உங்களின் அரசியல் 07



## நாகை - காங்கேசன் இடையிலான கப்பல் சேவை 18ஆம் திகதி ஆரம்பம்

நாகபட்டினம், ஜன. 12

காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையிலான கப்பல் சேவை எதிர்வரும் 18ஆம் திகதி மீண்டும் தொடங்கப்படும் என்று சுபம் கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்தது. இதனால், கடல் சீற்றம், டித்வா புயல் தாக்கம் காரணமாக இந்தக் கப்பல் சேவை கடந்த ஆண்டு ஒக்ரோபர் 26ஆம் திகதி இடைநிறுத்தப்பட்டது.

இதனிடையே, டித்வா புயல் தாக்கத்தால் 07

## ஐஸ் போதைப்பொருளுடன் அராலியில் இருவர் கைது!

த. பிரதீபன்

யாழ்ப்பாணம், ஜன. 12

ஐஸ் போதைப்பொருளுடன் அராலியை சேர்ந்த சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று நடத்திய விசேட சோதனை நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

19, 30 வயதான இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 5 கிராம், 39 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# செம்மணி படுகொலை விவகாரத்தை கைகழுவி விடவே அரசு முயற்சிக்கிறது

## சோமரத்ன ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 12

காணாமல்போனோர் பற்றிய பணிமனையினர் செம்மணி படுகொலை தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளாமல், காணாமல் போனோரில் சிலரின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கி, அந்த விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து கைகழுவி விடுவதற்கே முயற்சிக்கின்றனர் என்று கிருஷாந்தி குமாரசுவாமி படு கொலை வழக்கில் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

சோமரத்ன ராஜபக்ஷவை காணாமல் போனோர் பணிமனையினர் கடந்த வெள்ளிக்கிழமை இரண்டாவது தடவையாக சந்தித்தது. இந்த சந்திப்பு தொடர்பில் சோமரத்ன தம்மிடம் தெரிவித்தவை என்று அவரின் மனைவி எஸ். சி. விஜயவிக்ரம கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு தெரிவித்த விடயங்கள் வருமாறு,

செம்மணி படுகொலை தொடர்பான விபரங்களை கேட்டறியும் நோக்கில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை எனது கணவரை வெலிக்கடை சிறைச்சாலையில் சந்தித்தனர்.

இதன்படி அந்த அலுவலகத்தின் தலைவரால் எனது கணவரிடம் கூறப்பட்ட விடயங்களின் பிரகாரம், காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தினர் செம்மணி படுகொலை தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளாமல், காணாமல்போனோரில் சிலரது குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கி, அவ்விவகாரத்தை முடிவுக்குக்கொண்டு வந்து, சர்வதேச சமூகத்தின் மத்தியில் நாட்டுக்கு ஏற்பட்டிருக்கும் அவப்பெயரை சீரமைப்பதற்கே முயற்சிக்கின்றனர் என்ற விடயம் தெளிவாகப் புலப்பட்டதாக எனது கணவர் கூறினார்.

செம்மணி மனிதப்புதைகுழி குறித்து 09.07.2025 அன்று எனது கணவர் சார்பில் கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்ததுடன் 04.10.2025 அன்று இவ்விவகாரம் தொடர்பில் எனது கணவர் சட்டத்தரணி ஊடாக சத்தியக்கடதாசி ஒன்றையும் வழங்கியிருந்தார்.

அதில் அவர் 1996 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்படல்கள் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்தியிருந்தார். ஆனால், அரசாங்கம் இவையனைத்தையும் புறந்தள்ளிவிட்டு, சொற்பளவானோருக்கு இழப்பீட்டை வழங்கி, இந்த விவகாரத்தைக் கைகழுவி விடுவதற்கே முயற்சிக்கின்றது - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# சமஷ்டி அரசமைப்பு உருவாகும்வரை மாகாண சபைகள் முறைமை தேவை

## வடக்கு முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன்

கொழும்பு, ஜன. 12

தெற்குக்கு மாகாண சபைகள் அவசியமற்றதாக இருக்கலாம். ஆனால், ஒரு சமஷ்டி அரசமைப்பு உருவாக்கப்படும் வரை அல்லது அரசமைப்பு திருத்தங்கள் ஊடாக வட, கிழக்கு மக்களுக்கான சுயாட்சி உறுதிப்படுத்தப்படும் வரை மாகாண சபைகள் முறைமை நிச்சயமாக நடைமுறையில் இருக்கவேண்டும் இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதல்வர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு மாகாண சபைகள் முறைமை பொருத்தமில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர கூறியமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பெருவர்த்தகருமான திலித் ஜயவீரவை நான் பெரிதும் மதிக்கிறேன். அவர் அண்மைய காலத்திலேயே அரசியலுக்குள் பிரவேசித்தார். அதுமாத்திர மன்றி அவர் ஒரு தேசியவாதி என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நாம் எமது மக்கள் குறித்து அதிகம் சிந்திப்பதைப் போன்று, அவர் அவரது மக்கள் குறித்து அதிகம் சிந்திக்கிறார்.

இருப்பினும், அவரின் சிங்கள தேசியவாதமும் எமது தமிழ் தேசியவாதத்தைப் போன்றதே என்பதை ஏற்க அவர் மறந்துவிட்டார். தனது சிங்கள மக்களுக்காக சிந்திக்கும் உரிமை அவருக்கு உண்டு. இருப்பினும், இந்த ஒட்டுமொத்த நாடும் சிங்கள மக்களால் சூழ்ந்ததல்ல. இலங்கையில் பௌத்த மதம் அறிமுகமாவதற்கு முன்னரேயே வட, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த மக்கள் தமிழ் மொழியையே பேசினர். இந்நாட்டில் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்மொழி பேசும் மக்கள் வாழ்ந்துவருவதாக பேராசிரியர் இந்திரபாலா கூறுகிறார்.

இலங்கைக்கு மாகாண சபைகள் முறைமை பொருத்தமான தன்று என திலித் ஜயவீர கூறுவாராயின், இலங்கையில் அத்தகையதோர் மாற்றத்தைத் தோற்றுவிப்பதற்குத் தூண்டுதலாக அமைந்த அடிப்படைக் காரணிகள் குறித்து அவர் அறியவில்லை என்றே கருதவேண்டியிருக்கிறது - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# யானை தாக்கி ஒருவர் படுகாயம்

முல்லைத்தீவு, ஜன. 12

யானையின் தாக்குதலுக்கு இலக்காகி முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டானிலிருந்து வவுனியா நோக்கிச் சென்றவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

வவுனியா - சிறிநகரை சேர்ந்தவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். இவர், வவுனியாவுக்கு சென்று கொண்டிருந்த போது ஒட்டோ யானையுடன் மோதுண்டு தடம்புரண்டதில் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த நபர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)



துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் கோயிலில் பால்குட அபிஷேகத்துடன் கற்பூரத் திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது பெண்கள் பாற்குடம் ஏந்திவரும் காட்சி...

# பொலிஸ் உத்தியோகத்தர் நினைவாக குருதி கொடை



வடமராட்சி, நவ. 12

விபத்தில் உயிரிழந்த நெல்லியடி பொலிஸ் நிலைய உத்தியோகத்தரின் நினைவாக இரத்த தான முகாம் நேற்று நடைபெற்றது.

அம்பாறை - திருக்கோவிலைச் சேர்ந்த பத்மநாதன் ஜதர்சன் என்பவரின் நினைவாகவே இந்த இரத்த தான முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

விபத்தில் இறந்த பொலிஸ் உத்தியோகத்தரின் முதலாம் மாத நினைவாக நெல்லியடி பொலிஸ் புலனாய்வுத்துறை மற்றும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக இளைஞர்களின் ஏற்பாட்டில் இவ் இரத்ததான முகாம் நடைபெற்றது.

(ஐ-02)

# ட்ரோன்களை ஒழுங்குபடுத்த முறையான வேலைத்திட்டம்!

## சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை

கொழும்பு, ஜன. 12

ட்ரோன்களை ஒழுங்குபடுத்துவதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கப்டன் தமிந்த ரம்புக்வெல்ல குறிப்பிடுகையில்,

"சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை இந்த ட்ரோன் விமானங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. இதில், மனிதர்களை ஏற்றிச் செல்லும் ட்ரோன்கள் மற்றும் ஆளில்லா ட்ரோன்கள் என இரண்டு பிரிவுகள் உள்ளன. இவை முறையாக வானில் பறக்கவிடப்படுவதற்கான ஒழுங்கு விதிகளை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்த ஆண்டில் அவை நடைமுறைக்கு வரும்.

உண்மையில், இதில் எடை அடிப்படையில் பல வகைகள் உள்ளன. 250 கிராம் முதல் 25 கிலோ வரையிலான ட்ரோன்கள் இதில் அடங்கும். 250 கிராமுக்குக் குறைவான எடையுடைய "விளையாட்டுப் பொருள்" வகையைச் சேர்ந்த ட்ரோன்களை நாம் ஒழுங்குபடுத்தப் போவதில்லை. ஆனால், 250 கிராமுக்கு மேற்பட்ட அல்லது வணிக ரீதியா கப் பயன்படுத்தப்படும் ட்ரோன்களை நாம் கட்டாயம் ஒழுங்குபடுத்த வேண்டும்." -என்றார்.(ஐ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள் வழங்கப்பட்டன!

யாழ்ப்பாணம், ஜன. 12

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் சாதனை தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில்

ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக "திருவாசகம் என்னும் தேன்" என்ற தலைப்பில் ஆன்மீக அருளுரை நடைபெற்று.

இந்த நிகழ்வில், வாராந்த உதவிகளும் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு 3 இலட்சத்துக்கு 88 ஆயிரத்து 410 ரூபாய் பெறுமதியான 330 தைப்பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் யோ. சுதாகரனிடம் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. அத்துடன், வட்டுக்கோட்டை இளநிலா விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த மாணவர்களுக்காக 35 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-02)



# சமகால அரசியல் உரையரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 12

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த உரையரங்கில் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ். பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (ஐ)

# வர்த்தகரை கொல்ல முயற்சி சந்தேகநபர்கள் நால்வர் கைது

கொழும்பு, ஜன. 12

வர்த்தகர் ஒருவரை கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு - வத்தளையை சேர்ந்த வர்த்தகர் ஒருவரை மட்டக்குளியில் வைத்து சுட்டுக் கொல்லும் நோக்கில் மோட்டார் சைக்களில் வந்த இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ரிவால்வர் ரக கைத்துப்பாக்கி ஒன்றும், 6 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இவர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.01.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## புத்தர் சிலை திருட்டு

திருகோணமலையில் சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மலையுச்சியில் வைக்கப்பட்ட புத்தர் சிலை திருடப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளதாம். கடந்த வருடம் திருகோணமலை நகரத்தின் மத்தியில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் தேசிய அளவில் சூடான விவாதங்களை ஏற்படுத்தியிருந்தது. வைக்கப்பட்ட சிலையை அகற்றுமாறு அரசாங்கம் உத்தரவிட்டது தவறு என்னும் அடிப்படையில் எதிரணியினர் குரலெழுப்பினர். இதனைத் தொடர்ந்து அகற்றப்பட்ட சிலை மீளவும் அதே இடத்தில் வைக்கப் பட்டது. இப்போது அந்த சிலை கவனிப்பாரற்ற நிலையில் இருக்கிறது.

ஒரு புத்தர் சிலையை வைத்துவிட்டால் தங்களின் சிங்கள தேசியப் பணி முடிந்துவிட்டது என்றே வைத்தவர்கள் கருதிக் கொள்கின்றனர். இதனால், புத்தர் சிலைகள் வடக்கு - கிழக்கில் பெருகிக் கொண்டே செல்கின்றன. புத்தர் சிலை வைப்பதோ, விகாரைகளை நிர்மாணிப்பதோ தவறான விடயங்கள் அல்ல - ஏனெனில், இந்து ஆலயங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. இதேபோன்று இரண்டு குடும்பங்கள் இருக்கின்ற இடங்களில்கூட பள்ளிவாசல்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. எனவே, விகாரைகள் கூடாது என்று வாதிட முடியாது. ஆனால், வழிபடுவதற்கு மக்கள் இல்லாத இடங்களில் சிலைகள் வைக்கப்படுவதும், பின்னர் விகாரைகள் நிர்மாணிக்க முற்படுவதும்தான் தவறானது. உண்மையில், இதன் மூலம் பௌத்த மதத்துக்குத்தான் இழுக்கு. ஆனால், இதனை ஏன் இலங்கையின் பௌத்த மதபீடங்கள் கண்டுகொள்வதில்லை. தங்களின் பௌத்த பிக்குகளை நல்வழிப்படுத்த முயற்சிப்பதில்லை?

சிலைகள் கண்ட இடங்களில் எல்லாம் வைக்கப்படுவதால் அந்த சிலைகள்மீது சிங்களவர்களுக்குக்கூட மரியாதை இருக்குமா என்பது சந்தேகம்தான். ஒரு சில குழுக்கள் தங்களின் விசுவாசத்தைக் காண்பிப்பதற்காக புத்தரை அவமதித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதுதான் உண்மை. இந்த உண்மையை தென்னிலங்கை அரசியல்வாதிகள் அறியாமல் இருக்க வாய்ப்பில்லை. ஆனால், அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்னும் பேராசைக்கு முன்னால் அறிவு மழுங்கிவிடுகிறது.

புத்தர் சிலை எங்கு வைப்பது என்று தெரியாமல் வைக்கப்படுகின்ற காரணத்தால்தான் சிலைகளை காணவில்லை என்று தேட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஏனெனில், சிலை வைக்கப்பட்ட இடத்தில் அதனை வழிபடுவதற்கு மக்கள் இல்லை. இதேபோன்றுதான் தற்போது தமிழ் மக்கள் வாழும் இடமான தையிட்டியில் ஒரு பௌத்த விகாரையை நிறுவி முரண்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான விடுதலையை வழங்கும் உன்னத தத்துவமாகவே பௌத்தம் நோக்கப்பட்டது. இந்திய அரசியல் சாசனத்தை எழுதிய கலாநிதி அம்பேத்கர், பௌத்த மதத்தை தழுவிக் கொண்டார். ஏனெனில், அந்தளவுக்கு புத்தரின் போதனைகள் சமத்துவத்தையும் மனித மாண்பையும் போதிக்கிறது. ஆனால், இலங்கையிலோ புத்தர் காணி பிடிப்பதற்கான கருவியாக பயன்படுத்தப்படுகிறார். பௌத்த மதபீடங்கள் இவற்றை சீர்செய்ய முடியும். பௌத்தத்தை அதன் உண்மையான அர்த்தத்தில் தலைநிமிரச் செய்ய முடியும் ஆனால், அவர்கள் அதற்கு தயராக இல்லை.

புத்தர் சிலைகள் வைக்கப்படுவதானது உண்மையில் ஒரு பிரச்னைக்குரிய விடயமல்ல. ஆனால், அவற்றை வழிபடுவதற்கு - பாதுகாப்பதற்கு உரித்துள்ள மக்கள் இல்லாத இடங்களில் அதனை வைப்பதுதான் தவறானது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டில் கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாகக் கூறியிருந்தது. ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு வருடம் முடிந்துவிட்டது. ஆனால், சொல்லப்பட்ட மாற்றங்களை காண முடியவில்லை. முன்னைய ஆட்சியாளர்கள் போன்று சிக்கலான விடயங்களில் கைவைக்கத் தயங்கும் அரசாங்கமாகவே இருக்கிறது. சிக்கலான விடயங்களைத் தொடாமல் இலங்கையில் மாற்றங்கள் என்பது கானல்நீராகும். இதுதான் இதுவரையான அரசியல் வரலாறு. இந்த வரலாற்றுப் போக்கிலிருந்து நாங்கள் வேறுபட்டவர்கள் என்பது சொல்லில் அல்ல செயலில் இருக்க வேண்டும்.

# "எமது நாட்டை ஆபரணத் துறையின் கேந்திர மையமாக மாற்ற வேண்டும்"

கொழும்பு, ஜன. 12

எமது நாட்டை ஆபரணத் துறையின் கேந்திர மையமாக மாற்ற வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கண்காட்சியில் பங்கேற்றபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணத் துறையில் ஒரு நாடாக நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தை கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நாட்டில் காணப்படும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறை அடைந்து கொண்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது.

ஆகையால், இந்த முன்னேற்றத்தை மேலும் மேம்படுத்த இந்தத் துறையில் பின்பற்றப்பட்டு வரும் விதிமுறைகளைத் தளர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தத் துறைக்கு பெற்றுக் கொடுக்க முடியுமான சகல வகையிலுமான ஊக்கங்களையும் பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார்.

கொழும்பு சங்கிரி-லா ஹோட்டலில் நடைபெற்ற இந்த கண்காட்சியை சஜித் பிரேமதாஸ பார்வையிட்டார். இந்த நிகழ்வில் ஊடகங்களுக்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்தத் தொழில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதனால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகள் மீதான விதிமுறைகளை தளர்த்த வேண்டும். புதிய வழியில் சென்று நமது நாட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் கேந்திர மையமாக மாற்றியமைக்க வேண்டும்.

கடந்த காலத்திலிருந்து பாடங்களை கற்றுக் கொண்டு, சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளில் காணப்படும் தடைகளை நீக்கி, முறையான அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார். (எ)

## போலி நாணயத்தாள்களுடன் இருவர் அதிகாரிகளால் கைது

கொழும்பு, ஜன. 11

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகஸ் சந்தி அருகே 5,000 ரூபாய் போலி நாணயத்தாள்கள் ஐந்துடன் இரண்டு சந்தேக நபர்கள் களுத்துறை மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் சந்தேக நபர்கள் இருவரும் களுத்துறை தெற்கு பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் 50 வயது மதிக்கத்தக்கவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

களுத்துறை மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## ஐஸ், ஹெரோயின் போதையுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 12

நவகமுவ - மேல் போமிரிய பகுதியில் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் மதியம் நவகமுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 200 கிராம் 50 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 07 கிராம் 250 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து நவகமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## வாடகை அறையில் தங்கியிருந்த நபர் வெட்டிக் கொலை

கொழும்பு, ஜன. 12

பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெமுனு மாவத்தை பகுதியில் வாடகை அறையொன்றில் தங்கியிருந்த நபர் ஒருவர் கூர்மையான ஆயுதங்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த நபர் முல்லேரியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.


இவ்வாறு உயிரிழந்தவர் ஹோமாகம பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவர் என்று பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த நபர் பியகமை பகுதியில் வாடகை அடிப்படையில் தங்கியிருந்தார்.

அவர் தங்கியிருந்த அறைக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவரது ஓட்டோ தீப்பற்றி எரிவதைக் கண்டு, அவர் அறையிலிருந்து வெளியே வந்தார்.

இதன்போது, முகத்தை மூடியவாறு வந்த இருவர் கூர்மையான ஆயுதங்களால் அவரை தாக்கிவிட்டு தப்பிச் சென்றனர் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டாகும். விலை உயர்ந்த மின்னணு மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

**மிதுனம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர் களால் அலைச்சல் ஏற்படும். புதுவேலை கிடைக்கும். வீடு வாகனப் பராமரிப்புச் செலவுகள் வந்து போகும்.

**சிம்மம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். மனைவிவழியில் அந்தஸ்து உயரும். மனதிற்கு இதமான செய்தி வரும்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**துலாம்**
ராசிக்குள்சந்திரன்இருப்பதால்வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும் வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு மனை வாங்குவது லாபகரமாக அமையும்.

**மகரம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் மனதில் நிழலாடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.

**கும்பம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். புதியவர் நண்பர்களாவார்கள். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். அடுத்தவர்களை குறைக் கூறிக் கொண்டிருக்க வேண்டாம். வேலைச்சுமை மிகுந்த நாள்.

# தமிழாராய்ச்சி மாநாடு படுகொலை நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 52 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

இதில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா, பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.



1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் 9 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசு, பொலிஸ்துறையினரை ஏவி கலவரத்தை ஏற்படுத்தியது.

இதன்போது, 9 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதுமட்டுமின்றி தமிழர்கள் மனதில் நீங்காத வடுவாக இந்தப்படுகொலை சம்பவம் பதியப்பட்டது. (எ)

# 3,000 போதை மாத்திரைகளுடன் யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணம் - ஐந்து சந்திப்பகுதியில் 3,000 போதை மாத்திரைகளுடன் 27 வயது இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் போதை தடுப்புப் பிரிவினரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த போதை மாத்திரைகளின் பெறுமதி 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# காலநிலை சீரின்மையால் கடல் கொந்தளிப்பு பருத்தித்துறை மூர்க்கம் கடற்கரை பாதிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 12

காலநிலை சீரின்மையால் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக பருத்தித்துறை மூர்க்கம் கடற்கரை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை- தும்பளை கிழக்கு பகுதியில் உள்ள மூர்க்கம் கடற்கரையில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா, கொங்கிரீட் வீதி, சீமெந்து இருக்கைகள், நடைபாதை உள்ளிட்ட நிரந்தர கட்டுமானங்கள் அத்தனையும் கடல் கொந்தளிப்பில் அள்ளுண்டு போய் அழிவடைந்தன.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக மண் அரிப்பு ஏற்படும் பட்சத்தில் கடல் நீர் ஊர்மனைக்குள் உட்புகும் பேராபத்து உள்ளதாகவும் அவ்வாறு நடந்தால் அயலில் உள்ள ஒரு கிராமமே பெரிதும் பாதிக்கப்படும் நிலை ஏற்படலாம் என பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் சம்பவ இடத்துக்கு சென்று நிலைமைகளை பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் மற்றும் திணைக்கள பொறுப்பதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியிருந்தார். நகர சபை ஊழியர்கள் மூலம் அபாய நிலையில் காணப்பட்ட வீதியில் மக்கள் பிரவேசிக்காத வகையில் கற்களை கொண்டு தடை ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் சிறுவர் பூங்காவுக்குள் கடல் நீர் உட்புகும் நிலையில் அதற்கான மின்சார இணைப்பை துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-03)

# வடமராட்சியில் கடல் கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக கடல் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகிறது.

குறிப்பாக வடமராட்சி பகுதி கடல் மிகக் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகிறது. இதனால், சில கட்டுமானங்கள் கடல் அலையால் சேதமடைந்துள்ளன. (எ-03)

# விபசாரத்தில் ஈடுபட்ட நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 12

வெளிநாட்டில் வசிப்பவரின் சொகுசு வீட்டினை வாடகைக்கு பெற்று அந்த வீட்டினை விபசார நடவடிக்கைக்கு பயன்படுத்திய நபர் உட்பட நால்வர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி பகுதியில் வெளிநாட்டில் வசிக்கும் நபர் ஒருவர் சொகுசு வீட்டினை கட்டி, அதனை கிளிநொச்சியை சேர்ந்த ஒருவருக்கு வாடகைக்கு வழங்கியுள்ளார்.

இந்த நிலையில், குறித்த வீட்டுக்கு பெண்கள், ஆண்கள் என பலர் மோட்டார் சைக்கிள் கள், கார்களில் வந்து செல்வதனை அயலவர்கள் கவனித்து, வீட்டில் தவறான நடவடிக்கைகள் இடம் பெறுகின்றது என்பதனை ஊகித்து, வெளிநாட்டில் உள்ள வீட்டின் உரிமையாளருக்கு அறிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர் நடவடிக்கை எடுக்காத நிலையில், சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கோப்பாய் பொலிஸார் குறித்த வீட்டினை தமது கண்காணிப்புக்குள் கொண்டு வந்து, சில நாட்களாக கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வீட்டினை முற்றுகையிட்டனர்.

வீட்டினுள் சென்று சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட போது தென்னிலங்கையில் இருந்து விபச்சார நடவடிக்கைக்காக அழைத்து வரப்பட்டிருந்த மூன்று பெண் கள் மற்றும் வீட்டினை வாடகைக்கு பெற்றிருந்த நபர் உட்பட நால்வரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி சீர்திருத்தம் என்ற பெயரில் ஆபாசத்தை அறிமுகப்படுத்தாதீர்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஜன. 12

"இணையவழி கல்வியில் ஆபாசமான விடயங்களை அணுகுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டுமே தவிர, சீர்திருத்தம் என்ற பெயரில் ஆபாசத்தை அறிமுகப்படுத்தக் கூடாது. இதற்கு எதிராக மக்கள் இன்று அணிதிரண்டுள்ளனர். " என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

"இலவசக் கல்வியைப் பாதுகாப்போம்" எனும் தொனிப் பொருளில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஏற்பாட்டில் நடந்த கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். நேற்றுமுன்தினம் நடந்த இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் கூறுகையில், "எமது நாட்டின் எழுத்தறிவு, பொருளாதார வளர்ச்சி, தாய்-சேய் இறப்பு விகிதக் குறைவு மற்றும் ஆயுட்காலம் அதிகரிப்பு ஆகிய அனைத்துக்கும் இலவச கல்வியே காரணமாகும்.

அன்று கன்னங்கர இலவச கல்வியைக் கொண்டுவர முயன்றபோது, "தோட்டங்களில் தேங்காய் பறிக்க ஆட்கள் இல்லாமல் போய்விடுவார்கள்" எனப் பிரபு வர்க்கத்தினரும், பெரும் முதலாளிகளும் எதிர்த்தனர். அந்தத் தடைகளையெல்லாம் தாண்டித்தான் நமக்கு இலவசக் கல்வி கிடைத்தது. அதனைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.

கல்வியை புதுப்பிப்பது என்பது அதில் ஆபாசத்தைப் புகுத்துவது என்று அர்த்தமல்ல. இணையவழி கல்வியில் ஆபாசமான விடயங்களை அணுகுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டுமே தவிர, சீர்திருத்தம் என்ற பெயரில் ஆபாசத்தை அறிமுகப்படுத்தக் கூடாது. இதற்கு எதிராக மக்கள் இன்று அணிதிரண்டுள்ளனர்.

வசதி படைத்தவர்களின் பிள்ளைகளுக்கு மட்டும்



"ஸ்மார்ட் போர்ட்" கணினி வசதிகள் கிடைத்தால்போதாது. 41 இலட்சம் மாணவர்களுக்கும் அந்த உரிமை கிடைக்க வேண்டும். பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை "ஸ்மார்ட்" மாணவர்களை உருவாக்கி, ஒரு "ஸ்மார்ட் நாட்டை" கட்டியெழுப்ப வேண்டும். இலவச கல்வியை வலுப்படுத்துவதற்காக அடுத்த வார நடுப்பகுதியில் "தேசிய ஒன்றியம்" ஒன்றை நாம் ஆரம்பிக்கவுள்ளோம்" - என்றார். (ஐ)

# பூப்பறிக்க சென்ற சிறுவன் குளத்தில் மூழ்கி மரணம்

கொழும்பு, ஜன. 12

பூப்பறிக்க சென்ற சிறுவன் குளத்தில் தவறி விழுந்த சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

அநுராதபுரம் - கல்கிரியாகம - உஸ்ஸான பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த 12 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

# பொது பாதுகாப்பு அமைச்சின் இணைய ஊடுருவல் குறித்து சி. ஐ. டி. விசாரணை

கொழும்பு, ஜன. 12

பொது பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குள் வெளியார் ஊடுருவியமை தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குறித்த வலைதளமானது பல முறை வெளியாரால் ஊடுருவப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. இந்த சிக்கலை சரிசெய்ய இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு மற்றும் இலங்கை தகவல் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

இதேநேரம், வலைத்தளத்திலுள்ள சின்னத்தில் சில தெளிவின்மை காணப்பட்டதுடன், பொது பாதுகாப்பு அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில், அமைச்சின் செயலாளர் கடந்த 09 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு முறைப்பாடளித்துள்ளார்.

இதற்கமையவே, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. அத்துடன், அமைச்சின் மட்டத்திலும் உள்ளக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# கடவத்தையில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது!

கொழும்பு, ஜன. 12

கட்டுமான பணிகள் காரணமாக கொழும்பு - கண்டி வீதியின் கடவத்தை பகுதியில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு - கண்டி வீதியில் பண்டாரவத்தை - புவக்பிட்டிய பகுதியில் வீதியின் ஒரு மருங்கு மூடப்படும். எதிர்வரும் மார்ச் 15ஆம் திகதி வரை இந்த வீதி மூடப்பட்டிருக்கும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடவத்தை - மீரிகம அதிவேக இடமாறல் கட்டுமானப் பணிகளுக்காகவே இந்த போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

மாற்று வழியாக, கடவத்தை நகர மத்தியிலுள்ள சிக்னல் சந்தியில் இருந்து அதிவேக வீதி பிரவேச வீதி ஊடாக எல்தெனிய சிக்னல் சந்தி வரையிலான வீதியை பயன்படுத்த முடியும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

# விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு, ஜன. 12

லொறி ஒன்றின் பின்புறமாக மோட்டார் சைக்கிள் மோதி விழுந்த நிலையில் எதிரே வந்த மற்றொரு லொறி மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குருநாகல் - மெல்சிரிபுர பொலிஸ் பிரிவில் அம்பேபுஸ்ஸ - திருகோணமலை பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த இந்த விபத்து குறித்து அறியவருபவை வருமாறு,தம்புள்ளையிலிருந்து குருநாகல் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், முன்னால் பயணித்த லொறியின் பின்புறத்தில் மோதி எதிர் திசையில் வந்த மற்றுமொரு லொறியுடன் மோதியது.

இதில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் படுகாயமடைந்து பொல்கொல்லை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். மெல்சிரிபுரவை சேர்ந்த 51 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

# 1,620 லீற்றர் கோடாவுடன் புத்தளத்தில் ஒருவர் கைது

சிலாபம், ஜன. 12

1,620 லீற்றர் கோடாவுடன் சந்தேகநபர் ஒருவரை புத்தளம் - தங்கொட்டுவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிலாபம் ஊழல் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்று முன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.


சந்தேகநபரிடமிருந்து 1,620 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகநபர் தங்கொட்டுவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் கடல் அரிப்பு தீவிரம்!

## கடற்றொழிலாளர்கள் பாதிப்பு



திருகோணமலை , ஜன.12

திருகோணமலை கடற்பரப்பில் கடல் அலையின் அதிக சீற்றம் காரணமாக கரையோரப்பகுதிகளில் உள்ள கட்டடங்கள் கடலரிப்புக்குள்ளாகி தாழிறங்கி வருகின்றன. அந்தவகையில் வீரநகர் பகுதியில் சொல மன்ஸ் மீனவ கூட்டுறவுச் சங்க கட்டடம் கடலரிப்புக்குள்ளாகி வெடிப்புகள் ஏற்பட்டு ஆபத் தான நிலையில் காணப்படுகின்றது.


குறித்த கட்டடத்தில் கிராம உத்தியோகத்தர் அலுவலகம், கடற்றொழிலாளர் சேமிப்பு வங்கி என்பன இயங்கி வருகின்றன.

அத்துடன் வீரநகர் பகுதியில் நான்குவீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் இதுவரை தாழிறங்கியுள்ளன. இந்தநிலையில் குறித்த பகுதியில் கடலரிப்பை குறைப்பதற்காக கற்கள் போடும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

வங்காள விரிகுடாவில் நிலவும் தாழமுக்கம் காரணமாக திருகோணமலை கடற்பகுதியானது மிகுந்த கொந்தளிப்புடன் காணப்படுகின்றது. மீனவர்கள் இரண்டு மாதங்களுக்கு மேலாக தொழிலுக்கு செல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை டொக்கியாட் கடற்பகுதியில் சிவப்பு கொடி பறக்கவிடப்பட்டு சுற்றுலாப் பயணிகள் அப்பகுதியில் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பத்தாம் குறிச்சி, வீரநகர், திருக்கடலூர் உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் கடலுக்கு செல்லாமல் தங்களுடைய படகுகளை வீதிகளுக்கு பாதுகாப்பாக கொண்டு சென்று வருகின்றனர். (எ)

# லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து: ஒருவர் படுகாயம்



நுவரெலியா,ஜன.12

நானுஓயாவில் மோட்டார் சைக்கிளும் லொறியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நுவரெலியா - ஹற்றன் பிர தான வீதியில் வேண்டிகோனர் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கி ழமை காலைஇந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நுவரெலியாவிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் எதிர்த் திசையில் வந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர் நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்துள்ளது.

இந்தச்சம்பவத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# மின்சாரம் தாக்கியதில் 16 வயது சிறுவன் பலி!

திருகோணமலை,ஜன.12

குச்சவெளி - பள்ளிமுனை பகுதியில் நேற்றுமுன்தினம் காலை மின்சாரம் தாக்கி 16 வயதுசிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட மின்சார கம்பியில் சிக்கிய ஆடு ஒன்றை காப்பாற்ற முயன்றபோது மின்சாரம் தாக்கி சிறுவன்உயிரிழந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. குச்சவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, ரஸ்நாயக்கபுர - தலாகொலவேவ பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.உயிரிழந்தவர் வன்னி - ரஸ் நாயக்கபுர பகுதியைச் சேர்ந்த 75 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது.

வன விலங்குகளிடமிருந்து தனது பயிர்களை பாதுகாக்க, சட்டவிரோதமாக கட்டப்பட்ட மின்சார கம்பியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# வடக்கு,கிழக்கு மாகாணங்களில் மழை தொடரும்

கொழும்பு , ஜன.12

வடக்கு,கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும்என்றுஎன வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் சிறிதளவு மழை பெய்யக்கூடும் நாட்டின் ஏனைய பிரதேசங்களின் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.

மத்திய,சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் அதிகாலை வேளையில் பனிமூட்டம் காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கொழும்பு தொடக்கம் புத்தளம், மன்னார், காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான ஆழமான மற்றும் ஆழமற்ற கடல் பிராந்தியங்களில் விடுக்கப்பட்ட எச்சரிக்கை இரத்துச் செய்யப்படுகின்றது.

மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை, திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை பெய்யக்கூடும்.


நாட்டை சூழவுள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டை சூழவுள்ள கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோமீற்றர் வேகத்தில் கிழக்கு திசையிலிருந்து வடகிழக்காக காற்று வீசும்.

புத்தளம் தொடக்கம் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 - 55 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் கொந்தளிப்பாககாணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

# வீட்டின் கூரையிலிருந்து பல தோட்டாக்கள் மீட்பு!

## பொலிஸ் விசாரணை ஆரம்பம்



கல்முனை,ஜன.12

அம்பாறை மாவட்டம் பாணமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் வீட்டைப் பழுதுபார்க்கும் போது ஓடுகளுக்கு கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த பல தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

5.56எக்ஸ் 45எம்.எம். ரக தோட்டாக்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை பாணமை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

வீட்டின் உரிமையாளர் தற்போது கொழும்பில் வசிப்பதோடு தனது சகோதரிடம் குறித்த வீட்டினை பழுதுபார்க்கும் பணியை ஒப்படைத்திருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பாணமை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# நுவரெலியாவில் தியாகிகள் தினம் அனுஷ்டிப்பு



நுவரெலியா,ஜன.12

நுவரெலியா நகர மத்தியில் கவிதாஸ் சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள மலையக தியாகிகள் திடலுக்கு மலர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் அஞ்சலிசெலுத்தப் பட்டது. இந்தஅஞ்சலி நிகழ்வுநேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். ராஜாராம், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

1940 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி சம்பள போராட்டத்துக்காக உயிர் நீத்த முல்லோயா கோவிந்தன் முதலாவது மலையக தியாகியாக இந்த நினைவுத்தூபியில் பெயர் பதிக்கப்பட்டுள்ளது.(எ)

# மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விக்ரோரியா பூங்காவில் சிரமதானம்



நுவரெலியா, ஜன. 12

நுவரெலியாவில் நிலவிய மோசமான வானிலை காரணமாக விக்ரோரியா பூங்கா முழுமையாக வெள்ளத்தில் மூழ்கியது. இதனை நுவரெலியா மாநகர சபையின் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து சிரமதானம் மூலம் தூய்மைப்படுத்தினர்.

இதன்போது, விக்ரோரியா பூங்காவில் உள் மற்றும் வெளிப்புறச் சூழல் பூங்காவை சுற்றியுள்ள வடிகான்கள் என்பன சிரமதானம் செய்யப்பட்டன.

மேலும், சிறுவர் பூங்காவில் தேங்கிக் காணப்பட்ட பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன், கண்ணாடிகள், ஏனையவை என மூன்று பகுதிகளாக தரம்பிரிக்கப்பட்டு பெருந்திரளான திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டன. மேலும், தாழ்வான பகுதிகளில் காணப்பட்ட சேறும் சகதியும் கலந்து மண் திட்டுக்களையும் வெட்டி அகற்றி தூய்மைப்படுத்தும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாநகர சபையின் முதல்வர் எம். உபாலி வணிகசேகர மற்றும் பிரதி முதல்வர் உட்பட அனைத்து மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டு தூய்மைப்படுத்தும் செயல்பாட்டில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குக்கான...

இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 50 இலட்சம் அமெரிக்க டொலர் - நமது நாட்டின் மதிப்பில் சுமார் 154 கோடி ரூபாய் நிதி உதவியின் கீழ் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு 45 கோடி அமெரிக்க டொலர்களை இந்தியா உதவியாக அளித்தது. இந்த நிதியிலேயே புகையிரதப் பாதை புனரமைப்பு பணிகள் ஆரம்பமாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை...

குறித்து பிரதமர் மோடியின் மேலான கவனத்துக்குக் கொண்டுவருவது எனது கடமை.

இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் அரசமைப்பு சீர்திருத்தங்களால் இலங்கைத் தமிழ்ச் சமூகத்துக்கு ஏற்படும் கடுமையான பாதிப்புகளை எடுத்துரைக்கும் விரிவான கோரிக்கைகளை நான் பெற்றுள்ளேன். இலங்கைத் தமிழர்கள் 77 ஆண்டுகளுக்கும் மேலாக, திட்டமிட்ட பாகுபாடு - வன்முறை - அவர்களின் உண்மையான உரிமைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைச் சகித்து வந்துள்ளனர். பலர், இதனை தங்கள் சமூகத்துக்கு எதிரான இனப்படுகொலை என்று விவரிக்கும் ஒரு நிலைக்கு வழிவகுத்துள்ளது.

சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் அரசமைப்புகள் (1947, 1972, மற்றும் 1978 ஆம் ஆண்டுகளின் அரசமைப்புகள்) அனைத்தும் ஓர் ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்பில் வேரூன்றியிருந்தன. இது திட்டமிட்ட இன வன்முறை, கட்டமைப்பு ரீதியான ஒடுக்குமுறை மற்றும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கு வழிவகுத்தது.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த கடந்த 16 ஆண்டுகளாக, இந்த ஒற்றையாட்சி கட்டமைப்பு, பாரம்பரியமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளில் மக்கள் தொகை மாற்றங்கள், நில அபகரிப்புகள், தமிழ் அடையாளத்தின் சிதைவு ஆகியவற்றிற்கு தொடர்ந்து வழிவகுத்து வருகிறது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான, பாராளுமன்றத்தில் முழுப்பெரும்பான்மையைக் கொண்ட தற்போதைய இலங்கை அரசாங்கம் இனப் பிரச்னைகளைத் தீர்க்கும் போர்வையில், புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்தும் முயற்சிகளைத் துரிதப்படுத்தி வருகிறது. இந்த முன்மொழியப்பட்ட கட்டமைப்பு மீண்டும் ஓர் ஒற்றையாட்சி "எக்கியராஜ்ய" (ஒற்றையாட்சி அரசு) மாதிரியை வலுப்படுத்துவதாகத் தெரிகிறது.

இது அரசியல் சுயாட்சிக்கான தமிழர்களின் நியாயமான எண்ணங்களைப் புறக்கணித்து, அதன்மூலம் அவர்களை மேலும் ஓரங்கட்டி, அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. இந்தச் சூழலில், இந்திய அரசால் பூட்டானில் ஏற்பாடு செய்யப்பட்ட 1985 அமைதிப் பேச்சுகளின்போது, தமிழ் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட திம்பு கோட்பாடுகளில் குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளையே, தற்போது பெறப்பட்டுள்ள கோரிக்கைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில், இலங்கைத் தமிழர்களுக்கான ஒரு தனித்துவமான தேசத்தை அங்கீகரித்தல் (தமிழர் தேசியம்) - வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாக ஏற்றுக்கொள்வது (தமிழர் தாயகம்), தமிழ் தேசத்துக்கான தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்துதல் (தமிழர் தன்னாட்சி உரிமை)

மலையகத் தமிழர்களுக்கான முழு குடியுரிமை உரிமைகள் உட்பட, அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவத்தையும் பாகுபாடின்மையையும் உறுதி செய்யும் ஒரு கூட்டாட்சி ஆட்சி முறையை நிறுவுதல் போன்றவற்றையே இந்தக் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன.

இந்தக் கூறுகளை உள்ளடக்காமல் கொண்டுவரப்படும் எந்தவொரு புதிய அரசமைப்பும் அநீதி மற்றும் நிலையற்ற தன்மை தொடர வழிவகுக்கும். இது மீண்டும் மோதல்களுக்கும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கும் வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்தும்.

1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் உட்பட வரலாற்று ரீதியாக இலங்கையுடன் கொண்டுள்ள நட்புறவின் காரணமாக இலங்கையில் அமைதி மற்றும் நீதிக்காக நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டிய தார்மீகக் கடமையை இந்தியா கொண்டுள்ளது. இலங்கைத் தமிழர்களின் அவல நிலை, தமிழ்நாட்டில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இலட்சக்கணக்கான மக்கள், அங்குள்ளவர்களைத் தங்கள் உறவுகளாகக் கருதுகின்றனர். இலங்கையில் வாழும் தமிழர்களின் நிலைமையில் ஏற்படும் எந்தவொரு சரிவும் இரு தரப்பு உறவுகளுக்கும், இரு நாடுகளுக்கிடையேயான உறுதிப்பாட்டுக்கும் பெரியளவில் தாக்கங்களை ஏற்படுத்தும்.

இந்தச் சூழ்நிலையில், தமிழ் மக்களின் குறைகளை உண்மையாக நிவர்த்தி செய்யும் ஓர் அரசமைப்பு செயல்முறையைக் கொண்டுவருவதற்கு, இந்திய அரசாங்கம் இலங்கை அதிகாரிகளுடன் உயர்மட்ட அளவில் தூதரக நடவடிக்கைகள மேற்கொள்ள வேண்டும்.

மாகாணங்களுக்கு அதிகார பரவலாக்கம் செய்யும் - இனச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் - பன்முகத்தன்மை - சமத்துவக் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் கூட்டாட்சி முறைமையை உருவாக்குவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். இத்தகைய அணுகுமுறை, பிராந்திய அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கும் இந்தியாவின் பங்கை மதிப்பது மட்டுமல்லாமல், கூட்டாட்சி மற்றும் மொழி மற்றும் இனச் சிறுபான்மையினரைப் பாதுகாப்பது குறித்த நமது அரசமைப்பு விழுமியங்களுடனும் ஒத்துப் போகும். அந்த வகையில், பிரதமர் மோடி தலைமையின் கீழ், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்தியா முனைப்பான நடவடிக்கைகளை எடுக்கும். ஒரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வுக்கு அது பங்களிக்கும் என உறுதியாக நம்புகிறேன் - என்றுள்ளது. (ஐ)

## உயர்தர...

நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி ஆரம்பமான உயர்தர பரீட்சை பேரிடர்களால் இடைநிறுத்தப்பட்டது. இந்த நிலையில், எஞ்சியுள்ள 10 பாடங்களுக்கான பரீட்சைகளே இன்று முதல் நடைபெறவுள்ளன. 2 ஆயிரத்து 86 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீன...

தன்சானியா, லெசோதோ நாடுகளுக்கு சென்றுள்ள வோங் யீ அங்கிருந்து நேராக இலங்கை வருகிறார்.

அவரின் இந்தப் பயணத்தில், டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கையின் மறுசீரமைப்புக்கு விசேட நிதியுதவி திட்டம் ஒன்றையும் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், சீன ஆய்வு கப்பல்களுக்கு இலங்கை விதித்துள்ள தடையால் புதிய முதலீட்டுத் திட்டங்களை அறிவிப்பதில் அந்த நாடு பின்னடிப்பு காட்டுவதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், இது தொடர்பிலும் புதிய இணக்கப்பாடுகள் எட்டப்படும் என்றும் கூறப்படுகிறது.

வோங் யீ நாட்டில் தங்கியிருக்கும் இந்த இரு நாட்களிலும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி. பி) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உட்பட பல பிரமுகர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

அண்மையில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்ட குழுவினர் ஜே. வி. பி. தலைமையகத்துக்குச் சென்று பேச்சுகளை நடத்தினர். புதிய அரசியல் சூழலில் சீனாவின் 15ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கான உதவிகளை உறுதிப்படுத்துவதே வோங் யீயின் வருகையின் பிரதான நோக்கம் என்று கூறப்படுகிறது. (ஐ)

## நாகை...

காங்கேசன்துறை துறைமுகம் கடுமையாக சேதமடைந்தது. இந்த நிலையில், காங்கேசன்துறை துறைமுகம் சீரமைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து நாகபட்டினம் - காங்கேசன்துறை இடையிலான கப்பல் சேவை மூன்றரை மாதங்களுக்கு பின்னர் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் தொடங்க வாய்ப்புள்ளது. இந்த முறை நாகபட்டினம் - காங்கேசன்துறை இடையிலான கப்பல் சேவையின் போது பயணிகள் அதிகம் செல்லும் வகையில் புதிய கப்பல் இயக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழ் அரசு...

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் கூடி ஆராயவுள்ளன.

மாகாண சபைகள் தேர்தல் எந்த முறைமையின் கீழ் நடத்தப்படவேண்டும் என்பதை ஆராய்வதற்கும் அதுகுறித்த விதப்புரைகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கும் 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்ட 12 பேரடங்கிய விசேட செயல்குழுவை நியமிப்பதற்கான யோசனை ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான நளிந்த ஜயதிஸ்ஸவால் கடந்த வாரத்தொடக்கத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரு கட்சிகளும் கூடிப் பேச்சு நடத்தவுள்ளன.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் யாழ்ப்பாணத்திலுள்ள தலைமை பணிமனையில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதன்போது, மாகாண சபைகள் தேர்தலை இழுத்தடிக்கும் நோக்கில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சி குறித்தும், அதனை முறியடித்து மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்துவதற்குரிய அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் விரிவாக ஆராயப்படும் என்று தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

மாகாண சபைகள் தேர்தலை புதிய முறைமையில் நடத்துவதா அல்லது பழைய முறைமையில் நடத்துவதா என ஆராய்வதற்காகவே அரசாங்கம் தெரிவுக் குழுவை நியமிக்கிறது. அக்குழு புதிய முறைமையிலேயே மாகாண சபைகள் தேர்தலை நடத்தவேண்டும் எனத் தீர்மானித்தால், அதன் பின்னர் எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்கு ஓரிரு வருடங்கள் தேவைப்படும்.

எனவே, இந்த வருடம் மாகாண சபைகள் தேர்தலை நடத்தும் உத்தேசம் அரசாங்கத்துக்கு இல்லை என்றே தோன்றுகிறது. எனவே அடுத்த வாரம் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியுடனான சந்திப்பின்போது இதுபற்றி விரிவாக ஆராய்வோ என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தமிழ் அரசுக் கட்சியுடனான சந்திப்பில் பேசப்படவுள்ள விடயங்கள் தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கப்படாதபோதிலும், விசேட தெரிவுக்குழுவை நியமிக்கும் அரசாங்கத்தின் முயற்சி குறித்து நிச்சயமாகப் பேசப்படும் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் க. பிறேமசந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ)

## ரயில்...

புகையிரத கடவையை மோட்டார் சைக்கிளில் கடக்க முயன்றார். அப்போது, ரயில் மோதியதில் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். யாழ்ப்பாணத்தின் புறநகர் பகுதியான கொட்டடியை சேர்ந்த சிவராசா சிவலக்சன் (வயது 23) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இதனிடையே, இந்த பாதுகாப்பற்ற புகையிரத கடவையில் பல விபத்துகள் இடம்பெற்றுள்ளன. எனவே, அதனை பாதுகாப்பான புகையிரத கடவையாக மாற்றித் தருமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதிலும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (ஐ)

## இரு...

நடைபெறும் பொங்கல் விழாவிலும் கலந்து கொள்வார்.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மீசாலை ஆரம்ப பாடசாலையில் வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கான காசோலை வழங்கும் நிகழ்விலும் அன்று பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி மைதானத்தில் முழுநாடுமே ஒன்றாக போதைப்பொருள் ஒழிப்புக்கான தேசிய செயல்பாட்டு நிகழ்விலும் பங்கேற்பார். (ஐ)

## கங்காராமை...

செயல்பாடுகள் தொடர்பாக உயர்ந்த அபிப்பிராயம் இருப்பதை அவதானிக்க முடிகிறது. டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் செயற்பாடுகளை தொடர்ந்தும் நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர்", என்று விகாராதிபதி தெரிவித்தார் என்று கூறப்பட்டது.

டக்ளஸ் தேவானந்தாவுக்கு படையினர் வழங்கிய 19 துப்பாக்கிகள் தொடர்பாக கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி டக்ளஸ் தேவானந்தா கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவரை கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றம் பிணையில் விடுவித்திருந்தது. (ஐ)

## ஐஸ்...

கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# ஐ. தே. க., ஐ. ம. ச. ஒன்றிணைவு சஜித், சாகல இரகசிய சந்திப்பு

கொழும்பு, ஜன. 12

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றை ஒன்றிணைக்கும் நோக்கில், சஜித் பிரேமதாஸ, சாகல ரத்நாயக்க ஆகியோர் இரகசிய பேச்சு நடத்தியள்ளனர்.

கொழும்பு கிளப்பில் நடந்த இந்த சந்திப்பில் எவ்வித வெளிப்புறத் தலையீடுகளுமின்றி பல மணிநேரம் நீடித்தது என்று அறிய வருகிறது.

இந்தச் சந்திப்பில், சஜித் பிரேமதாஸ தனது கடந்தகால கசப்பான அனுபவங்களை மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் வெளிப்படுத்தினார் என்றும் நவீன் திஸநாயக்க, ருவான் விஜேவர்த்தன மற்றும் அகில விராஜ் காரியவசம் ஆகியோரிடம் முன்கூட்டியே ஆலோசித்த பின்னரே சஜித் பிரேமதாஸ இந்தச் சந்திப்பை நடத்தினார் எனவும் கூறப்படுகிறது.

மேலும், "ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்ட தருணத்தில், நான் சிங்கப்பூரில் இருந்த போதிலும் பழைய விடயங்களை மறந்து அவருக்கு ஆதரவாக நிற்குமாறு எனது கட்சியினருக்கு கூறினேன். அவர் மருத்துவமனையில் இருந்தபோது ஒவ்வொரு நாளும் சென்று பார்த்தேன். ஆனால், அதற்கு பின்னர் இடம்பெற்ற சில விடயங்கள் வேதனையளித்தன", என்றும் கூறியுள்ளார்.

அத்துடன், இரு கட்சிகளையும் ஒன்றிணைக்க வேண்டியது இலட்சக்கணக்கான ஆதரவாளர்களின் விருப்பம் என்பதை ஏற்றுக் கொண்ட சஜித், அதற்கு ரணில் விக்கிரமசிங்க "ஆலோசனை" மட்டத்தில் மாத்திரமே இருக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

தற்போது இரு கட்சிகளிலும் நாட்டை வழிநடத்தக்கூடிய திறமையான இளைய தலைவர்கள் இருக்கின்றனர். அவர்களே தற்போது தேவை. இரு தரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுவான நிகழ்ச்சி நிரலை முதலில் தயாரிப்பதே முறையான அணுகுமுறை என அவர் இதன்போது முன்மொழிந்துள்ளார். இறுதியில், சஜித், ரணில் ஆகிய இரு தலைவர்களுக்கும் இடையில் நேரடி சந்திப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என சாகல ரத்நாயக்க முன்வைத்த யோசனையை சஜித் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டார்.

எனினும், அந்தச் சந்திப்புக்கான திகதி குறித்து முடிவாகவில்லை. எனினும், அந்தச் சந்திப்புக்கு தகுந்த நேரம் தற்போதில்லை என்று சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார் என்றும் அறிய முடிகிறது. (ஐ)

## கல்வி சீர்திருத்தத்துக்கு எதிராக தொடர் சத்தியாகிரக போராட்டம்

### விமல் வீரவன்ஸ அறிவிப்பு

கொழும்பு, ஜன. 12

புதிய கல்விச் சீர்திருத்தங்களை உடனடியாக மீளப்பெற வேண்டும். கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி இன்று திங்கட்கிழமை முதல் கல்வி அமைச்சுக்கு முன்பாக தொடர் சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தவுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் பிள்ளைகளின் எதிர்காலத்தைச் சீரழிக்கும் வேலைத் திட்டமே தற்போது முன்னெடுக்கப்படுகிறது. இந்தச் சீர்திருத்தங்களுக்கான பாடநெறித் தொகுப்புகளில் ஆபாச இணையதளங்கள் மற்றும் ஆபாச யூரியூப் சனல்களுக்கான இணைப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை மிகவும் அதிர்ச்சியளிக்கிறது.

இது தொழில்நுட்ப கருவிகளின் பயன்பாட்டை அதிகரித்து, அதன் மூலம் பணம் சம்பாதிக்கும் வர்த்தக சதி. பாடநெறி தொகுப்பில் இவ்வாறான இணையதளங்களைச் சேர்ப்பதன் மூலம், இலட்சக்கணக்கான மாணவர்கள் அவற்றை அணுக நேரிடும். இதன் மூலம் ஈட்டப்படும் பெருமளவிலான பணம் யாருடைய கைகளுக்குச் செல்கிறது என்பது குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும். எந்தவொரு கல்விச் சீர்திருத்தமும் நிபுணர்களின் ஆலோசனையுடனும் முன்னோடித் திட்டங்கள் ஊடாகவும் மிகவும் அவதானமாகவே முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆனால், எவ்வித கலந்துரையாடல்களும் இன்றி அவசர கதியில் இந்த சீர்திருத்தங்கள் திணிக்கப்படுவதால் இவ்வாறான மன்னிக்க முடியாத தவறுகள் இடம்பெறுகின்றன - என்றும் கூறினார். (ஐ)

## வாகன இலக்க தகடுகள் தயாரிப்பு வரும் வாரம் புதிய நிறுவனத்திடம்!

கொழும்பு, ஜன. 12

புதிய வாகன இலக்கத் தகடுகளைத் தயாரிப்பதற்கான நீண்ட காலமாகத் தாமதமடைந்து வந்த ஒப்பந்தம் அடுத்த வாரம் சவுத் ஏசியன் ரெக்னோலோஜிஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட வாய்ப்புள்ளது என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது நிலுவையிலுள்ள இலக்கத் தகடுகளின் எண்ணிக்கை 2 இலட்சத்தை கடந்துள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ள போதிலும், ஒப்பந்தம் இன்னும் உத்தியோகபூர்வமாக இறுதி செய்யப்படவில்லை. எனினும், அதன் பணிகள் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளன என்றும் அவர் கூறினார்.

உந்துருளிகள், சிற்றூந்துகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மின்சார வாகனங்கள் உட்பட 2 இலட்சத்திற்கும் அதிகமான வாகனங்கள் நிரந்தர இலக்கத் தகடுகள் இன்றி காத்திருக்கின்றன. தினசரி பதிவாகும் புதிய வாகனங்களால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய இலக்கத் தகடுகள் மோசடிகளைத் தடுக்கவும், கண்காணிப்பை மேம்படுத்தவும் 7 பாதுகாப்பு அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட பின்னர், உற்பத்தியாளர் தனது பணிகளை ஆரம்பித்து முதல் தொகுதி இலக்கத் தகடுகளை விநியோகிக்க அதிகபட்சம் 3 மாத கால அவகாசம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இஸ்லாமிய அரச ஊழியர்களுக்காக நெகிழ்வான பணிநேரம் அறிமுகம்

கொழும்பு, ஜன. 12

புனித ரமழான் மாதத்தில் இஸ்லாமிய அரச ஊழியர்கள் தமது மத கடமைகளை இலகுவாக நிறைவேற்றும் வகையில் அனைத்து அரச நிறுவனங்களிலும் நெகிழ்வுப்போக்கான பணி நேரத்தை அறிமுகப்படுத்துமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான விசேட சுற்றறிக்கை அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதி சட்ட சபைகளின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான ரமழான் நோன்பு எதிர்வரும் பெப்ரவரி 19ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் காலப்பகுதியில் முஸ்லிம் ஊழியர்கள் நோன்பு நோற்பதற்கும் ஏனைய மத அனுஷ்டானங்களில் ஈடுபடுவதற்கும் ஏதுவாக பணி அட்டவணைகளை மாற்றி அமைக்குமாறு அந்தந்த நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மதக் கடமைகளுக்காக விசேட விடுமுறைகளை வழங்குவதைவிட, பணி நேரங்களைச் சீரமைப்பதன் மூலம் தேவைகளை நிர்வகிக்குமாறு அமைச்சு வலியுறுத்தியுள்ளது. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் மட்டுமே விசேட விடுமுறைகளை அங்கீகரிக்குமாறு நிறுவனத் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## உள்நாட்டு விமான சேவையை வலுப்படுத்துவதற்கு திட்டம்!

### விமான போக்குவரத்து அமைச்சர்

கொழும்பு, ஜன. 12

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக, உள்நாட்டு விமான சேவைகளை வலுப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

முக்கியஸ்த சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு ஈர்க்க அவர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும் - என்று நேற்று முன்தினம் காலியில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போது அமைச்சர் அநுர கருணாதிலக மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஐ)

## 1,540 நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன!

கொழும்பு, ஜன. 12

கடந்த வருடம் 1,540 நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தப்பட்டன என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் வரலாற்றில், ஒரு வருடத்தில் பதிவு செய்யப்பட்ட அதிக எண்ணிக்கையிலான நிகழ்ச்சித் திட்டங்கள் இதுவாகும். சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில், இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம், ஒரு இலட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை அதிகாரிகள் நேரடியாகச் சந்தித்துள்ளனர்.

மேலும், நுகர்வோர் மற்றும் வர்த்தகர்களுக்கான விழிப்புணர்வானது, மின்னணு, டிஜிற்றல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வருடத்தில் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தை இலக்காகக் கொண்டு இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேலும் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்றும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## வாகன இறக்குமதி அதிகரிப்பு பொருளாதாரத்தில் அழுத்தம்!

### இலங்கை மத்திய வங்கி

கொழும்பு, ஜன. 12

கடந்த ஆண்டு வாகன இறக்குமதி எதிர்பார்த்த இலக்கை விடவும் அதிகரித்ததால் நாட்டின் வெளிநாட்டு பொருளாதார துறையில் அழுத்தம் ஏற்பட்டது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வாகன இறக்குமதிமீதான தடைகள் மீண்டும் விதிக்கப்படும் என்ற உண்மைக்குப் புறம்பான தகவல்கள் ஊடகங்களில் பரவியமையும் இதற்கு காரணமென கூறப்படுகிறது.

டித்வா சூறாவளி தாக்கத்துக்கு முன்னதாக மேற்கொண்ட கணிப்புகளின்படி, 2026ஆம் ஆண்டில் பணவீக்கம் படிப்படியாக உயர்வடைந்து, ஆண்டின் இரண்டாம் பாதியில் இலக்கை எட்டும். இயற்கை பேரழிவுகள் காரணமாக பணவீக்கத்தில் உயர்வு மற்றும் இறக்கம் ஆகிய இரு வகை அபாயங்களும் உள்ளன - என்று மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

## 55 வீதமான மருந்தகங்கள் மூடப்படும் அபாயநிலை!

கொழும்பு, ஜன. 12

உரிம சிக்கல்களால் நாட்டில் 55 சதவீதமான தனியார் மருந்தகங்கள் மூடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்று அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நிலவும் பிரச்னைகளுக்குத் தீர்வு காணுமாறு சுகாதார அமைச்சின் அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும், சாதகமான பதிலோ அல்லது நிவாரணமோ கிடைக்கவில்லை என்று சங்கத்தின் தலைவர் சந்திக கங்கந்த கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தகவல் வெளியிட்டுள்ளார். (ஐ)

## டித்வால் சேதமடைந்த மின்சார வேலிகளை ஒரு வாரத்துக்குள் மீளமைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 12

"டித்வா" புயலால் சேதமடைந்த பாதுகாப்பு மின்சார வேலிகளை மீளமைக்கும் பணிகளின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், சுற்றாடல் அமைச்சர் தம்மிக படபெந்திய தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

புயலால் பெருமளவான மின்சார வேலிகள் சேதமடைந்தன. குறிப்பாக அநுராதபுரம் மாவட்டத்தின் திம்புலாகல வனஜீவராசிகள் வலயத்தில் பாதுகாப்பு வேலிகளுக்கு முழுமையான மற்றும் பகுதி சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் பொலநறுவை மாவட்டத்தின் ஏழு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மின்சார வேலிகள் சேதமடைந்துள்ளன.

பாதுகாப்பு மின்சார வேலி பராமரிப்புப் பணிகளை ஒரு "சிரமதான பணியாக" அல்லது கூட்டுப் பொறிமுறையொன்றின் ஊடாக முன்னெடுப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கமைய, இந்தக் கூட்டு நடவடிக்கையை ஒரு வாரத்துக்குள் நிறைவு செய்யுமாறு சுற்றாடல் அமைச்சரினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.